இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 138 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 12 – வியாழக்கிழமை 28 டிசம்பர் 2023 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 138 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 12 - Thursday 28 December 2023 - Kovai ★★ 8 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.12.2023) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 155.42 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1000 புதிய வகுப்பறை கட்டடங்கள், மாநிலத்தின் 21 மாவட்டங்களில் 20.54 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 50 கிராம ஊராட்சி செயலகக் கட்டடங்கள், மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 24.39 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 102 ஊராட்சி மன்றக் கட்டடங்கள் மற்றும் 15.46 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் இ.பெரியசாமி, ஆர்.காந்தி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், பள்ளிக் கல்வித் துறை செயலாளர் ஜெ. குமரகுருபரன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.12.2023) தலைமைச் செயலகத்தில், உள் (போக்குவரத்து) துறை சார்பில் தமிழ்நாட்டிலுள்ள 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 54 மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகங்கள், என மொத்தம் 145 அலுவலகங்களில் ஓட்டுநர் தேர்வு நடத்தும் பொருட்டு 6 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 145 இலகு ரக மோட்டார் கார் வாகனங்களை வழங்கிடும் வகையில் 3 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையர் அ.சண்முகசுந்தரம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வரலாறுகாணா பெருமழை: இதுவரை இல்லாத அளவிலான இந்தச் சவாலான சூழ்நிலையை தமிழ்நாடு எதிர் கொள்ள

# போதிய வெள்ள நிவாரண நிதியை வழங்க வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஒன்றிய நிதி அமைச்சருக்கு கோரிக்கை!

**சென்னை, டிச. 28–**

**ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களிடம் நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் அதி கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்புகள் குறித்த விவரங்கள் அடங்கிய கோரிக்கை மனுவினை அளித்து, நிவாரணம் மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள நிதி வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளார்.**

அப்பதிவு வருமாறு:–

இந்தியாவிலேயே இரண்டாவது நீளமான கடலோரப் பகுதிகளைக் கொண்டுள்ளதுடன், கடந்த நூறாண்டுகளில் 50 புயல்களை எதிர்கொண்டுள்ள தமிழ்நாடு தொடர்ந்து இத்தகைய இயற்கைச் சீற்ற ஆபத்துகளுக்கு உள்ளாகி வருகிறது.

மிக்ஜாம் புயல் ஏற்படுத்திய பாதிப்புகளோடு சேர்ந்து, அண்மையில் தென் மாவட்டங்களில் பெய்த அதிகனமழையும் மாநிலத்தில் பெரும் சேதத்தை விளைவித்திருக்கிறது.

நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, தூத்துக்குடி மக்களவைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.



கனிமொழி கருணாநிதி மற்றும் மூத்த அதிகாரிகள் ஒன்றிய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களிடம் தற்போதைய நிலையையும் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகளையும் பற்றி எடுத்துரைத்தனர்.

மேலும், தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்புகளைக் குறித்த விவரங்கள் அடங்கிய 72 பக்க விரிவான கோரிக்கை மனுவையும் அளித்து, இப்பேரிடரை எதிர்கொண்டு, நிவாரண மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான நிதி ஆதாரங்களின் தேவையை வலியுறுத்தினர்.

மாநிலப் பேரிடர் நிவாரண நிதியில் குறைந்த அளவான நிதியே இருக்கும் நிலையில், ஏற்பட்டுள்ள பாதிப்புகள் அதனை விடப் பன்மடங்கு மிகுதியாக உள்ளன.

எனவே, இதுவரை இல்லாத அளவிலான இந்தச் சவாலான சூழ்நிலையைத் தமிழ்நாடு எதிர்கொள்ளப் போதிய நிதி உதவியை ஒன்றிய அரசு வழங்க வேண்டும் என அக்கறையோடு கோருகிறோம்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### முதல்வரின் சீரிய நடவடிக்கையால் நடப்பு நிதியாண்டில்

## தமிழ்நாட்டில் உள்நாட்டு உற்பத்தி ரூ.28 லட்சம் கோடியாக உயர்வு!

### வளர்ச்சி விகிதம் 11.66 சதவிகிதமாக உயர்ந்து சாதனை!

*சென்னை, டிச. 28 -*

தி.மு.க. அரசு பொறுப்பேற்ற கடந்த இரண்டு ஆண்டுகளில் பன்னாட்டு நிறுவனங்கள் தங்களது புதிய மற்றும் விரிவாக்க திட்டத்திற்கான முதலீடுகளை தமிழ்நாட்டில் மேற்கொண்டுள்ளன.

2030க்குள் 1 லட்சம் கோடி டாலர் பொருளாதாரமாக மாற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைநோக்கு சிந்தனைகளுடன் செயல்படுத்தி வரும் பொருளாதாரம் சார்ந்த முன்னெடுப்புகள் தொழில்துறையில் பல்வேறு சாதனைகளை படைத்து வருகின்றன.

டிட்கோ நிறுவனம் பெரும் முதலீடு மற்றும் அதிக வேலை வாய்ப்புகளை அளிக்கக்கூடிய பெரிய தொழில் மற்றும் உட்கட்டமைப்பு திட்டங்களை மாநிலத்தில் நிறுவ வழிவகை செய்து வருகின்றன.

அதேபோல், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், புதிய தொழில் நிறுவனங்கள் அமைப்பதற்கும் ஏற்கனவே இயங்கிவரும் நிறுவனங்களை விரிவுபடுத்துவதற்கும், நவீனமயமாக்குவதற்கும் நிதியுதவி அளிக்கிறது. இதில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு மொத்த நிதியில் 40 சதவீதம் நிதி பங்களிப்பு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 18 ஆண்டுகளாக லாபத்தில் இயங்கி வரும் இந்த கழகம், இதுவரை 1.27 லட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கு நிதி உதவி வழங்கியுள்ளது.

இதுமட்டுமின்றி, சிப்காட், டான்சிட்கோ போன்ற நிறுவனங்களும் தமிழ்நாட்டில் தொழில் சார்ந்த வளர்ச்சிக்கு மிகப்பெரிய அரணாக திகழ்ந்து வருகின்றன.

அந்தவகையில் 2023-24க்கான மதிப்பீட்டின்படி தமிழ்நாட்டின் உள்நாட்டு உற்பத்தி 28.3 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. ஒட்டுமொத்தமாக ஆண்டு வளர்ச்சி விகிதம் 11. 66 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

இந்நிலையில், ஜனவரி மாதத்தில் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர் மாநாடு மூலம், மாநிலத்தின் பொருளாதாரம் மேலும் அதிகரிப்பதுடன், ஏராளமான வேலைவாய்ப்புகளும் ஏற்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

---

### மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களுக்கு

# ரூ.6.25 கோடியில் 145 இலகுரக வாகனங்கள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, டிச. 28 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.12.2023) தலைமைச் செயலகத்தில், உள் (போக்குவரத்து) துறை சார்பில் தமிழ்நாட்டிலுள்ள 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 54 மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகங்கள், என மொத்தம் 145 அலுவலகங்களில் ஓட்டுநர் தேர்வு நடத்தும் பொருட்டு 6 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 145 இலகு ரக மோட்டார் கார் வாகனங்களை வழங்கிடும் வகையில் 3 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு :–

போக்குவரத்துத்துறை அலுவலகப் பணிகளான பழகுநர் மற்றும் ஓட்டுநர் உரிமங்கள் வழங்குதல், புதிய வாகனங்கள் பதிவு செய்தல், போக்குவரத்து வாகனங்களுக்கான தகுதிச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல், வாகனங்களுக்கான சாலை வரிகளை வசூலித்தல், வாகன தணிக்கை போன்ற பல்வேறு பணிகளை சிறப்பாகவும், துரிதமாகவும் மேற்கொள்ளவும், பொதுமக்கள் சிரமமின்றி போக்குவரத்துத்துறை தொடர்பான சேவைகளை பெறவும், புதிய பகுதி அலுவலகங்களை தோற்றுவித்தல், பகுதி அலுவலகங்களை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்துதல், ஓட்டுநர் தேர்வுத் தள வசதிகளுடன் புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களை அமைத்தல் போன்ற பல்வேறு பணிகள் உள் (போக்குவரத்து) துறை வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**ஓட்டுநர் தேர்வு!**

2023–2024 ஆம் ஆண்டிற்கான உள் (போக்குவரத்து) துறை மானியக் கோரிக்கையில், இலகு ரக வாகன ஓட்டுநர் உரிமம் (LMV CAR) பெற விரும்பும் பொதுமக்களில் பெரும்பாலானோர் சொந்த வாகனம் இல்லாத காரணத்தால், ஓட்டுநர் உரிமம் பெறும் பொருட்டு, ஓட்டுநர் பயிற்சி பள்ளியை அணுக வேண்டிய நிலை உள்ளது.

இதனை தவிர்க்கும் பொருட்டு, இனிவரும் காலங்களில் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் / பகுதி அலுவலகங்களில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்கான தேர்வு நடத்தும் பொருட்டு, 145 அலுவலகங்களுக்கும் 145 எண்ணிக்கையிலான இலகு ரக மோட்டார் வாகனங்கள் (LMV Car) கொள்முதல் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, பொதுமக்கள் நலன் கருதி அரசின் சார்பில் தமிழ்நாட்டில் உள்ள 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 54 மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகங்களை உள்ளடக்கிய மொத்தம் 145 அலுவலகங்களில் ஓட்டுநர் தேர்வு நடத்தும் பொருட்டு 6 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்ட 145 எண்ணிக்கையிலான இலகு ரக மோட்டார் கார் வாகனங்களை வழங்கிடும் வகையில் முதலமைச்சர் அவர்கள் 3 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையர் அ.சண்முகசுந்தரம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 28-12-2023

# துல்லியமாகச் சொன்னார்களா?

“மழை பற்றி 12 ஆம் தேதியே எச்சரித்தபிறகும் தமிழ்நாடு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன?” என்று எதுவும் தெரியாத சிலர் கேள்வி எழுப்பி வருகிறார்கள். மழை பெய்யும் என்று சொன்ன வானிலை ஆய்வு மையம், இந்தளவுக்கு மழை பெய்யும் என்று எச்சரிக்கவில்லை என்பதே உண்மை.

“தென் மண்டல வானிலை ஆய்வு மையம் சென்னையில்தான் உள்ளது. இந்த அலுவலகம் சார்பில் தென் மாநிலங்களுக்கான மழை அபாயம் குறித்து 12 ஆம் தேதியே தகவல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் 14 முதல் 16 வரையிலான மழை அறிவிப்பு இருந்தது. இது அதிநவீன மையம் என்பதால் அடுத்த 5 நாட்களுக்கான மழை குறித்து அறிந்து எச்சரிக்கை தருகின்றனர். இது தவிர ஒவ்வொரு 3 மணி நேரத்துக்கும் மழை எச்சரிக்கையும் அளிக்கப்பட்டு வருகிறது. தங்களுக்கு முன்னெச்சரிக்கை கிடைக்கவில்லை என்று கூறுபவர்கள் இதை மனதில் வைப்பது அவசியம். அங்கு டோப்ளர் எனும் 3 அதிநவீன கருவிகள் உள்ளன. மழை பற்றி 12 ஆம் தேதியே அளித்த எச்சரிக்கைக்குத் தமிழக அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன? கனமழை பெய்யும் என்று முன்கூட்டியே எச்சரித்தும் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்கவில்லை” என்று ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் குற்றம் சாட்டி இருக்கிறார்.

டிசம்பர் 12 ஆம் தேதி வானிலை ஆய்வு மையம் என்ன சொன்னது?

நாள்: 12.12.2023 நேரம்: 12:30 மணி வானிலை தகவல்:

**தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.**

*** 12.12.2023: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.**

*** 13.12.2023 மற்றும் 14.12.2023: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.**

*** 15.12.2023: தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.**

*** 16.12.2023: தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.**

*** 17.12.2023 மற்றும் 18.12.2023: தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.**

– இயக்குனர் தென் மண்டல தலைவருக்காக மண்டல வானிலை ஆய்வு மையம், சென்னை - வெளியிட்ட அறிக்கை இது. மதியம் 12.30க்கும் வெளியான அறிக்கை இது. இரவு 7 மணிக்கும், 10 மணிக்கும் வெளியிட்ட அறிக்கையில் ‘கனமழை’ இருக்கும் என்றார்கள்.

* கனமழை என்றால் மஞ்சள்

* மிக கனமழை என்றால் ஆரஞ்ச்

* அதி கனமழை என்றால் சிவப்பு வண்ணத்தில் வானிலை ஆய்வு மையம் செய்தி வெளியிடும். ஆனால் 12 ஆம் தேதி வெளியான அறிக்கையில் சிவப்பு நிறம் இல்லை, மஞ்சளில்தான் வெளியிட்டார்கள்.

நெல்லை, தூத்துக்குடியில் பெய்த மழை அளவு எவ்வளவு?

17 ஆம் தேதியன்று தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் 48 செ.மீட்டரும், திருச்செந்தூரில் 36 செ.மீட்டரும், கோவில்பட்டியில் 36 செ.மீட்டரும் பெய்தது. இதே போல் நெல்லை மாவட்டத்தில் 25 முதல் 35 செ.மீட்டர் மழை பெய்தது.

18 ஆம் தேதி காயல்பட்டினத்தில் 95 செ.மீட்டருக்கு மழை பெய்துள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையைச் சுற்றியுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 39 இடங்களில் அதிகனமழை பெய்தது. 33 இடங்களில் மிக கனமழை பெய்தது. 12 இடங்களில் கனமழை பெய்தது. நெல்லை மாவட்டத்தில் அதிகபட்சமாக 62 செ.மீட்டர் மழை பெய்தது. தூத்துக்குடி மாவட்டத்தில் சராசரியாக 38 செ.மீட்டர் மழை பெய்தது. இவை வானிலை ஆய்வு மையமே எதிர்பாராதது ஆகும்.

18 ஆம் தேதி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த வானிலை மையத்தின் தென் மண்டலத் தலைவர் பாலச்சந்திரன், **“பொதுவாக புயல், தாழ்வு மண்டலம், தாழ்வுப் பகுதி போன்ற நிகழ்வுகள் வரும் போதுதான் அதிகனமழை இருக்கும். ஆனால் வளிமண்டல சுழற்சி உருவாகி, அதில் அதிகனமழை வரை இப்போது பெய்திருக்கிறது. இதுபோல் பெய்தது இல்லை”** என்று சொன்னார். (தினத்தந்தி 19.12.2023)

வானிலை ஆய்வு மையம் சொன்னது ‘கனமழை’ மட்டும் தான். ஆனால், பெய்தது – ‘மிக கனமழை’யையும் தாண்டிய ‘அதிகனமழை’ ஆகும். ‘இது போல் பெய்தது இல்லை’ என்று பாலச்சந்திரனே சொல்லி விட்டார்.

சென்னை வானிலை ஆய்வு மையத்தின் முன்னாள் இயக்குநர் எஸ்.ஆர். ரமணன் அளித்துள்ள பேட்டியில், **“வானிலை ஆய்வைப் பொறுத்தவரையில் துல்லியம் என்ற பேச்சுக்கே இடமில்லை. வானிலை என்பது நொடிக்கு நொடி மாறக் கூடியது. சில தரவுகள், முன் அனுபவங்கள் மூலமாகக் கணிக்க முடியும். மழையைக் கணிக்கும் அளவுகோலின் உச்சபட்ச அளவே 20 செண்டி மீட்டர் தான். அதற்கு மேல் மழை என்றால் 20க்கும் மேல் என்று சொல்வதுதான் நடைமுறையில் இருக்கிறது. அதைத் தான் ரெட் அலர்ட் என்கிறோம். அது 30 செ.மீ., 40 செ.மீ. ராக இருக்கலாம். துல்லியமாகச் சொல்ல முடியாது. இவை எல்லாம் முன்னறிவிப்புகள், கணிப்புகள் மட்டும்தான்”** என்று சொல்லி இருக்கிறார். (ஜூனியர் விகடன் 27.12.2023)

**ஆனால் துல்லியமாகக் கணித்ததாகவும், துல்லியமாகச் சொன்னதாகவும் துல்லியமாக துணிச்சலாகப் பொய்ச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் எதிர்க் கட்சியினர்.**




இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு அவர்களின் 99–வது பிறந்த நாளையொட்டி நேற்று முன்தினம் தியாகராயர் நகரிலுள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. பங்கேற்று நல்லகண்ணு அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

## தூத்துக்குடிக்கு சிவகங்கையிலிருந்து ரூ. 1.50 கோடி மதிப்பிலான நிவாரணப் பொருட்கள்!

சிவகங்கை, டிச. 28-

தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி, தென்காசி ஆகிய 4 மாவட்டங்கள் பெரு மழையினால் பாதிப்புக்கு உள்ளானது. இதில் தூத்துக்குடி மாவட்டம் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டது. தமிழக முதல்வர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிப் பொருட்களை அனுப்பி வைக்குமாறு வேண்டு கோள் விடுத்து இருந்தார்.

அதன்படி சிவகங்கை மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் ஒரு கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பிலான நிவாரணப் பொருட்கள் லாரி மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. பலசரக்கு சாமான்கள், உணவுப் பொட்டலங்கள், அரிசி, வேட்டி, சேலைகள், மெழுகுவர்த்திகள், பால் பவுடர் உள்பட பல்வேறு உதவி பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டது.

இதில் அலுவலர்கள் சார்பில் ரூ.98 லட்சத்து 81 ஆயிரத்து மதிப்பிலும் பள்ளி மாணவ, மாணவிகள் சார்பில் ரூ.41 லட்சத்து 80 ஆயிரத்து மதிப்பிலும் மொத்தம் ஒரு கோடியே 42 லட்சம் மதிப்பிலான பொருட்களை மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் லாரி மூலமாக அனுப்பி வைத்தார்.


### எளிமையின் அடையாளம்; தகைசால் தமிழர்

# தோழர் நல்லகண்ணு பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, டிச. 28-**

**பொதுவுடைமை இயக்கத்தின் மூத்தத் தலைவர் தோழர் நல்லகண்ணு அவர்களின் 99வது பிறந்த நாளை முன்னிட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், “எளிமையின் அடையாளமாகத் திகழும் தகைசால் தமிழர் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.**



தகைசால் தமிழர், தோழர் நல்லகண்ணு அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு :-

**99ஆவது பிறந்தநாள் கொண்டாடும் பொதுவுடைமை இயக்கத்தின் மூத்த தலைவர், எளிமையின் அடையாளமான தகைசால் தமிழர், தோழர் நல்லகண்ணு அவர்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்!**

**ஆங்கிலேய அடக்குமுறை ஆட்சியை நம் மண்ணில் இருந்து அகற்றப் போராடிய ஐயா நல்லகண்ணு அவர்கள், நமக்கெல்லாம் ஊக்கமாகவும் உறுதுணையாகவும் இருந்து என்றும் வழிநடத்திட வேண்டும்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### சென்னை வர்த்தக மையத்தில் இன்று நடைபெறுகிறது! இந்திய சமூக நீதிப் போரில் முதல் களம்!

# ‘வைக்கம் போராட்டம்’ நூற்றாண்டு சிறப்பு விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - கேரள முதல்வர் பினராயி விஜயன் பங்கேற்பு!

**சென்னை, டிச.28-**

**இந்திய சமூகநீதிப் போரில் முதல் களமான வைக்கம் போராட்டம் நூற்றாண்டு சிறப்பு விழா சென்னை வர்த்தக மையத்தில் இன்று (28.12.2023) நடைபெறுகிறது. இந்நிகழ்வில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கேரளா முதலமைச்சர் பினராயி விஜயன் ஆகியோர் பங்கேற்கிறார்கள்.**

கேரள மாநிலம் வைக்கத்தில் மகாதேவர் கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களில் தாழ்த்தப்பட்டவர்கள் நடந்து செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இதை எதிர்த்து, 1924ஆம் ஆண்டு அங்கு மிகப்பெரிய போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்ட நிலையில் போராட்டம் தொடர்ந்து நடைபெற முடியாத நிலை ஏற்பட்டது.

அப்போது, கேரள போராட்டத் தலைவர்கள் தந்தை பெரியார் அவர்களுக்கு கடிதம் எழுதி, இந்தப் போராட்டத்திற்கு நீங்கள் வந்துதான் உயிர் கொடுக்க வேண்டும். உடனே புறப்பட்டு வாருங்கள் என்று கோரினர். கடிதம் கிடைத்ததும், உடனே, தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாட்டிலிருந்து புறப்பட்டு வந்து; வைக்கம் போராட்டத்தை தலைமையேற்று நடத்தி மக்களிடையே மிகப்பெரிய எழுச்சியை ஏற்படுத்தினார். போராட்டம் தீவிர மடைந்தது. மக்கள் திரண்டு போராட்டத்திற்கு ஆதரவு அளித்தனர்.

அதனால் தந்தை பெரியார் அவர்கள் இரண்டு முறை கைது செய்யப்பட்டார்கள். முதல் முறை ஒரு மாதமும், இரண்டாம் முறை ஆறு மாதமும் அவருக்கு தண்டனை அளிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் கால்களிலும், கைகளிலும் சங்கிலியால் பிணைக்கப்பட்டு அவர் சிரமப்படுத்தப்பட்டார். இடையில் திருவாங்கூர் மகாராஜா இயற்கை எய்திடவே, ராணியார் அனைவரையும் விடுதலை செய்தார். தந்தை பெரியாருடன் சமாதானம் நடைபெற்று, வைக்கம் தெருவில் நடக்கக் கூடாது என்ற தடையை ராணி நீக்கினார். இதனால், தந்தை பெரியார் அவர்களின் போராட்டம் மகத்தான வெற்றியில் முடிந்து வைக்கம் வீரர் என்று அழைக்கப்பட்டார்.

இந்தியாவில் சமூக அளவில் சாதி காரணமாக நிலவிய ஏற்றத்தாழ்வுகளை ஒழித்திட நடைபெற்ற முதல் போராட்டம் இந்த வைக்கம் போராட்டம் ஆகும். இந்தப் போராட்ட வெற்றியின் 100ஆம் ஆண்டினைக் குறிக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் சில அறிவிப்புகளை வெளியிட்டார்.

அந்த அறிவிப்புகளின் தொடர்ச்சியாக தமிழ்நாடு அரசின் சார்பில் வைக்கம் போராட்டம் நூற்றாண்டு சிறப்பு விழா இன்று (28.12.2023 - வியாழன்) காலை 11.15 மணியளவில் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறுகிறது.

இந்த விழாவில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலரை வெளியிட்டு விழாப் பேருரை நிகழ்த்துகிறார்.

கேரளா முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் “பெரியாரும் வைக்கம் போராட்டமும்” என்ற நூலை வெளியிட்டு முன்னிலையுரை ஆற்றுகிறார்.

“திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விழாச் சிறப்புரையாற்றுகிறார்.

இவ்விழாவின்போது செய்தி மக்கள் தொடர்புத் துறை தயாரித்துள்ள ‘வைக்கம் போராட்டம்’ குறித்த ஆவணப்படம் திரையிடப்பட உள்ளது. மேலும், பள்ளி மாணவர்கள் சார்பில் சமத்துவக் கொண்டாட்டம் நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.

## தென்மாவட்டங்களில் நிவாரணம் வழங்குவதற்கான டோக்கன் வழங்கும் பணி!

நெல்லை, டிச. 28-

வரலாறு காணாத வகையில் கொட்டித்தீர்த்த அதிகனமழையால், திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. தமிழ்நாடு அரசின் துரித நடவடிக்கையால், அந்த மாவட்டங்களில் சில நாட்களிலேயே இயல்பு நிலை திரும்பியது.

இந்த நிலையில், நெல்லை மாவட்டத்தில், நிவாரணத் தொகை வழங்குவதற்கான டோக்கன் வழங்கும் பணி துவங்கி உள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, சேரன்மகாதேவி ஆகிய மூன்று வட்டங்கள் முழுமையாக பாதிக்கப்பட்டதாகவும், அம்பாசமுத்திரத்தில் 12 வருவாய் கிராமங்களும் நாங்குநேரியில் 30 வருவாய் கிராமங்களும், ராதாபுரத்தில் 10 வருவாய் கிராமங்களும் பாதிக்கப்பட்டதாக கணக்கீடு செய்து, நிவாரணத்தொகை வழங்குவதற்கான டோக்கன் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஒன்றியம் மருதுறை ஊராட்சியில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் மருதுறை கே.ஜி வலசு சாலையில் நொய்யல் ஆற்றின் குறுக்கே ரூ.7.31 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட உயர்மட்டப் பாலத்தை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன், நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர் உ.பழனியப்பன், காங்கேயம் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் மகேஷ்குமார், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் கிருஷ்ணவேணி வரதராஜ், மருதுறை ஊராட்சி மன்றத் தலைவர் செல்வி சிவக்குமார் உள்பட பலர் உள்ளனர்.

## மக்களாட்சியின் மாண்பினை கிராம அளவில் உறுதி செய்திட

# ஊராட்சித் துறையில் ரூ.215.81 கோடியில் புதிய கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, டிச. 28 -

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.12.2023) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 155.42 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1000 புதிய வகுப்பறை கட்டடங்கள், மாநிலத்தின் 21 மாவட்டங்களில் 20.54 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 50 கிராம ஊராட்சி செயலகக் கட்டடங்கள், மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 24.39 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 102 ஊராட்சி மன்றக் கட்டடங்கள் மற்றும் 15.46 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**

ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுகாதார வசதிகள், சாலை வசதிகள், பாலங்கள் போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் விதத்தில், பழுதடைந்த ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வாயிலாக அரசு செயல்படுத்தி வருவதுடன், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், பெரியார் நினைவு சமத்துவபுரம், முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் போன்ற புதுமையான ஊரக வளர்ச்சி திட்டங்களையும் இவ்வரசு வகுத்து, அனைத்து தரப்பு மக்களின் முன்னேற்றத் திற்காக செயல்படுத்தி வருகிறது.

**குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டடங்களை திறந்து வைத்தல்!**

முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவை விதி எண் 110ன் கீழ், ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு சுமார் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6000 புதிய வகுப்பறைகளும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சுமார் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1200 வகுப்பறைகளும், என மொத்தம் 1050 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7200 வகுப்பறைகள் நடப்பாண்டிலேயே கூடுதலாகக் கட்டப்படும் என்று அறிவித்தார். அதன் அடிப்படையில்

2022-23ஆம் ஆண்டில் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5,653 புதிய வகுப்பறைகள் கட்ட அரசாணை வெளியிடப்பட்டது. இத்திட்டம் "குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்" என்று ஊரகப் பகுதிகளில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இக்கட்டடங்கள் அனைத்தும் குழந்தை நேய சிறப்பு அமைப்புகளான உயர்த்தப் பட்ட மேற்கூரை, விசாலமான தாழ்வாரம், காற்றோட்டமிக்க ஜன்னல் வசதிகள், வழுக்காத தரைகள், கற்றலை ஊக்குவிக்கும் சுவர் ஓவியங்கள், வாழ்க்கைப் பாடங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய தாகும்.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக தமிழ்நாட்டின் 37 மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கட்டி முடிக் கப்பட்ட 1000 வகுப்பறைகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 26.09.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**34 மாவட்டங்களில் 1000 வகுப்பறைகள்!**

தற்போது, நேற்று முன்தினம் இரண்டாம் கட்டமாக மாநிலத்தின் 34 மாவட்டங்களில் 155.42 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 1000 தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி வகுப்பறைகளை தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

**50 கிராம ஊராட்சி செயலகக் கட்டடங்கள் கட்டப்படும் என்ற அறிவிப்பு செயலாக்கம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 22.4.2022 அன்று சட்டப்பேரவை விதி எண் 110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், கிராம அளவில், ஊரக வளர்ச்சித் துறை மற்றும் வருவாய்த் துறைக்கு மட்டுமே அலுவலகங்கள் தனித்தனியே செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், பிற துறைகள் மூலம் கிராமங்களில் செயல்படுத்தப்படக்கூடிய திட்டங்களை ஒருங்கிணைத்து, அதனைக் கண்காணிக்க கிராம அளவில் வசதிகளை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே, உள்ளாட்சியில் நல்லாட்சி என்ற நோக்கத்துடன், மக்களாட்சியின் மாண்பினை கிராம அளவில் உறுதி செய்திட ஏதுவாக, ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை மற்றும் சமூக நலத் துறைபோன்ற முக்கிய துறைகளின் மூலம் செயல்படுத்தப்படக்கூடிய அரசின் பல்வேறு திட்டங்களை கிராம அளவில் ஒருங்கிணைத்து செவ்வனே செயல்படுத்திட 600 ஊராட்சிகளில் "கிராமச் செயலகங்கள்" கட்டப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

அதனடிப்படையில், கிராம ஊராட்சி அலுவலகம் மற்றும் கிராம நிர்வாக அலுவலகம் ஒரே கிராமத்தில் அமையப்பெற்று இருப்பின், அவற்றை முதன்மைப்படுத்தி சுமார் 600 கிராமச் செயலகக் கட்டடங்கள் கட்ட திட்டமிடப்பட்டு, முதற்கட்டமாக மாநிலத்தின் 21 மாவட்டங்களில் 20.54 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 50 கிராமச் செயலகங்களை முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

**5 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள்**

கிராமச்செயலகக் கட்டடங்களில் கிராம ஊராட்சித் தலைவருக்கான அறை, கிராம ஊராட்சி செயலருக்கான அறை, கிராம நிர்வாக அலுவலருக்கான அறை மற்றும் கூட்ட அறை, இணையதள வசதி, பொதுமக்கள் அமர்வதற்கான வசதி, குடிநீர் மற்றும் கழிவறை வசதி ஆகியவற்றுடன் அனைத்து துறை அலுவலர்களும் பயன்படுத்திடும் வகையில் கூட்ட அறையில் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம், கிராம ஊராட்சியிலுள்ள பொதுமக்கள் கிராம செயலகங்களை எளிதில் அணுகி தங்களது குறைகளைப் போக்கிட வழிவகை ஏற்படும்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் மற்றும் தேசிய கிராம சுயாட்சி திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் 24 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கட்டப்பட்டுள்ள 102 கிராம ஊராட்சி மன்றக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு பழுதடைந்த நிலையில் இருந்த ஊராட்சி ஒன்றியக் கட்டடங்களுக்குப் பதிலாக, நாமக்கல் மாவட்டம் பரமத்தி, தேனி மாவட்டம் போடி நாயக்கனூர், கிருஷ்ணகிரி மாவட்டம் – கெலமங்கலம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் - மணச்சநல்லூர், மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் – பொள்ளாச்சி தெற்கு ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்க் கூறு நிதியிலிருந்து 15.46 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, கைத்தறி, துணி நூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர். காந்தி, பள்ளிக்கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், பள்ளிக் கல்வித் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா. பொன்னையா, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## தோல்விமேல் தோல்வியையே தன் கட்சிக்குப் பரிசாக அளிக்கும் தோல்விசாமி

## பழனிசாமிக்கு – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பற்றிப் பேச அருகதை இல்லை!

# வெள்ள பாதிப்பின்போது மக்களோடு நிற்கும் எங்கள் இளைஞரணிச் செயலாளரை விமர்சிப்பதா?

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி கண்டனம்!

சென்னை, டிச.28–

**தோல்வி மேல் தோல்வியையே தன் கட்சிக்குப் பரிசாக அளிக்கும் தோல்விசாமி பழனிசாமிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைப் பற்றிப் பேச அருகதை இல்லை என்றும், கஜா புயல் டெல்டாவைத் தாக்கியபோது மாமனார் வீட்டு விசேஷத்தைச் சிறப்பித்துக் கொண்டிருந்த பழனிசாமி, வெள்ள பாதிப்பின்போது மக்களோடு களத்தில் நிற்கும் எங்கள் இளைஞரணிச் செயலாளரை விமர்சிப்பதா? என்றும், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளார்.**

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

சேலத்தில் உள்ள தனது வீட்டில் இருந்து எப்போதாவது வெளியில் வந்து முகத்தைக் காட்டி விட்டு மீண்டும் வீட்டுக்குள் பதுங்கிக் கொள்வதையே வழக்கமாக வைத்திருப்பவர் தான் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் எடப்பாடி பழனிசாமி.

நானும் இருக்கிறேன் என்று காட்டிக் கொள்வதற்காகத் திருவாய் மலர்ந்து பேட்டிகள் கொடுப்பார். சட்டமன்றத் தேர்தல் தோல்விக்குப் பின்னால் மக்கள் மன்றத்தால் நிராகரிக்கப்பட்டு, ஒதுக்கித் தள்ளப்பட்ட பழனிசாமி, தோல்வியை மட்டுமே தனது கட்சிக்கு வாரி வழங்கிக் கொண்டு இருக்கிறார். சென்னையைச் சுற்றிலும், நெல்லையைச் சுற்றிலும் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து அவர்களுக்கான நிவாரணப் பொருள்களை வழங்கி மக்கள் பணி செய்ய மனமில்லாமல், பொதுக்குழு என்ற பெயரால் பொழுதுபோக்குக்கச்சேரியை நடத்தி முடித்திருக்கிறார் பழனிசாமி. அதில் கழக அரசைப் பற்றி வாய்க்கு வந்ததை வழக்கம் போல உளறி இருக்கிறார்.

"நான் சில விஷயங்களை அவிழ்த்து விட்டால் எடப்பாடி பழனிசாமி திகாருக்குச் சென்று விடுவார். சில விஷயங்கள் அரசாங்க ரகசியம் என்பதால் அமைதியாக விட்டு விட்டேன்; முதல்வராக என் கையெழுத்து இல்லாமல் ஒரு கோப்பும் சென்றது இல்லை" என அ.தி.மு.க. பொதுக்குழு நடந்த அன்று ஓ.பன்னீர்செல்வம் பேசியிருக்கிறாரே... அந்த ரகசியங்களை எடப்பாடி சொல்வாரா? அப்படி என்ன டீலிங் நடைபெற்றது?

**இரட்டை முகமூடி!**

"பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை எனத் தெளிவுபடுத்திவிட்டோம்" என பொதுக்குழுவில் பேசியிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி. கூட்டணி இல்லை என முடிவாகிவிட்டால் பா.ஜ.க.வை விமர்சிக்க வேண்டியதுதானே! அ.தி.மு.க.வை யார் கட்டிப் போட்டிருக்கிறார்கள். அ.தி.மு.க. பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்றிய அரசைக் கண்டித்தோ அல்லது பா.ஜ.க.வைக் கண்டித்தோ ஒரு தீர்மானத்தைக் கூட நிறைவேற்றவில்லையே ஏன்? தமிழ்நாடு அரசு தொடர்பான தீர்மானங்களில் 'கண்டனம்'; ஒன்றிய அரசு தொடர்பான தீர்மானங்களில் எல்லாம் 'வலியுறுத்தல்' என்பது இரட்டை முகமூடிதானே!

பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்ற பழனிசாமியின் பச்சைப் பொய் நாடகத்தை மக்கள் நம்பத் தயாராக இல்லை. சென்னையிலும் தென் மாவட்டங்களிலும் ஏற்பட்ட மழை வெள்ளப் பாதிப்புகளின் காரணமாகக் கழக இளைஞரணி மாநாடு தள்ளி வைக்கப்பட்டதை ஏளனம் செய்து மட்டமாகக் கருத்து தெரிவித்துப் பேசியிருக்கிறார் பழனிசாமி.

புயல் மழை வெள்ளத்தால் தமிழ்நாட்டின் 8 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டு இருக்கும்போது மாநாடு நடத்த வேண்டாம் என்று எங்கள் தி.மு.கழகத் தலைமை முடிவெடுத்ததைப் பழனிசாமி பாராட்டி இருக்க வேண்டும். ஏதோ தான் சாபம் விட்டதைப் போல சவடால் விட்டுள்ளார் பழனிசாமி.

தூத்துக்குடி துப்பாக்கிச்சூட்டையே டிவியைப் பார்த்துத் தெரிந்து கொண்டவர் பழனிசாமி. அதனால் அவர் டிவி பார்த்திருந்தால் தெரிந்திருக்கும். இளைஞர் அணி மாநாடு 2 முறை தான் தள்ளி வைக்கப்பட்டது. அதுவும் மக்களுக்காக! சென்னை வெள்ளம் ஏற்பட்ட போதும், தென் மாவட்டங்களில் மழை பாதிப்பு உண்டானபோது ஆட்சியில் இருக்கும் தி.மு.க. முதலில் மக்களுக்குத்தான் சேவை செய்யும். கட்சி மாநாடு இரண்டாம்பட்சம்தான்.



மதுரை அ.தி.மு.க. மாநாட்டில் தொண்டர்களுக்கு மோசமான வகையில் உணவு வழங்கப்பட்டதால் அண்டா அண்டாவாக உணவைத் தரையில் கொட்டி விரயமாக்கியது எல்லாம் மறந்து விட்டதா? தவழ்ந்து சென்று முதல்வரான எடப்பாடிதான் அரசியலில் கத்துக்குட்டி. கஜா புயல் டெல்டாவைத் தாக்கியபோது சேமூர் அம்மாபாளையத்தில் மாமனார் வீட்டு விசேஷத்தில் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்த பழனிசாமி எல்லாம் வெள்ள பாதிப்புக் களத்தில் மக்களோடு நிற்கும் அமைச்சர் உதயநிதியைப் பற்றிப் பேசவே அருகதை அற்றவர்.

**தொண்டர்களை ஏமாற்றுகிறார்!**

'எம்.ஜி.ஆர் அவர்களின் மனைவியும் முன்னாள் முதலமைச்சருமான ஜானகி அம்மாளின் நூற்றாண்டு விழா அ.தி.மு.க. சார்பில், சிறப்பான முறையில் கொண்டாடப்படும் என அ.தி.மு.க. பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். இவர்கள் முன்கூட்டியே தயாரித்து வைத்திருந்த தீர்மானப் புத்தகத்தில் இது இல்லை. ஜானகி அம்மாளின் நூற்றாண்டு விழாவை மறந்துவிட்டதால் அதனைத் தீர்மானப் புத்தகத்தில் சேர்க்கவில்லை. கடைசி நேரத்தில் யாரோ நினைவுபடுத்த வேறு வழியில்லாமல் சிறப்புத் தீர்மானம் என்ற பெயரில் தனியாகக் கொண்டு வந்து தொண்டர்களை ஏமாற்றியிருக்கிறார்கள்.

2022 நவம்பர் 30-ஆம் தேதி தான் ஜானகி அம்மாளின் 100ஆவது பிறந்தநாள். அந்த நூற்றாண்டைக் கூட கொண்டாட முடியாமல் அ.தி.மு.க.வில் ஓ.பி.எஸ். மற்றும் இ.பி.எஸ். அணிகள் பிரிந்து சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். அ.தி.மு.க. வில் உட்கட்சிக் குழப்பம் நடந்து வந்தபோது ஜானகி அம்மாளை மறந்துவிட்டு திடீரென தேர்தல் நேரத்தில் ஜானகி அம்மாளின் நூற்றாண்டைக் கொண்டாட நினைக்கிறார்கள்.

கடந்த ஆண்டு ஜானகி அம்மாள் 100ஆவது பிறந்தநாள் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டார். டாக்டர் எம்.ஜி.ஆர்.ஜானகி கல்லூரியில் நடந்த ஜானகி எம்.ஜி.ஆரின் நூற்றாண்டு துவக்க விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று எம்.ஜி.ஆர். ஜானகி கல்லூரி வளாகத்தில், திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்தார். ஜானகி அம்மாள் நூற்றாண்டு சிறப்பு மலரையும் வெளியிட்டார். ஜானகி அம்மாளை வாழ்த்தியும் பேசினார். ஜானகி அம்மாளின் நூற்றாண்டு விழாவே முடிந்த பிறகு திடீரென எந்த போதி மரத்திலோ ஞானோதயம் பெற்று அவருடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவோம் எனப் பழனிசாமி அறிவித்திருக்கிறார்.

காவிரி நதிநீர் பிரச்சினை நாடாளுமன்றத்தில் எழுந்த போது, தொடர்ந்து 22 நாட்கள் நாடாளுமன்றத்தைத் தமிழக மக்களின் நலனுக்காக அ.தி.மு.க. உறுப்பினர்கள் முடக்கினார்கள்" என சொல்லியிருக்கிறார் எடப்பாடி பழனிச்சாமி.

பழனிசாமி சொல்லும் அந்த நிகழ்வு நடந்தது 2018 மார்ச் மாதம் நடந்தது. ஆந்திராவிற்கு சிறப்பு அந்தஸ்து வழங்காததைக் கண்டித்துத் தெலுங்கு தேசம், ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியினர் நாடாளுமன்றத்தில் மோடி அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அப்போது கொண்டு வந்தனர். அதனை நிறைவேற்ற விடாமல் தடுப்பதற்காக அ.தி.மு.க. எம்.பி.க்கள் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்தி பல நாட்களுக்கும் மேலாக நாடாளுமன்றத்தை முடக்கினார்கள்.

**மோடியின் பொம்மை எடப்பாடி!**

"அ.தி.மு.க.வுக்கும், பா.ஜ.க.வுக்கும் மேட்ச் பிக்ஸிங் உள்ளது" என்று அன்றைக்கு காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம்சாட்டினார். அந்த நேரத்தில்தான் "காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கும் விஷயத்தில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவு அளிப்போம்" எனச் சொன்ன கே.சி.பழனிசாமியை மின்னல் வேகத்தில் கட்சியைவிட்டு நீக்கி மோடி விசுவாசத்தை காட்டினார் பழனிசாமி. எனவே காவிரிக்காக நாடாளுமன்றத்தை முடக்கினோம் என அவர் சொன்னதும் பச்சைப் பொய்யே ஆகும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறித்து அவதூறான பல குற்றச்சாட்டுகளைப் பழனிசாமி வைத்துள்ளார். பொம்மை முதலமைச்சராக இருக்கிறார் என்றும் குற்றம் சாட்டி இருக்கிறார். சசிகலாவின் பொம்மையாக எடப்பாடி முதலில் இருந்தார். டி.டி.வி. தினகரனின் பொம்மையாக மாறினார். பின்னர் மோடியின் பொம்மையாக மாறினார். கமலாலயத்தில் ஒரு அறையில் அ.தி.மு.க. அலுவலகத்தை நடத்தி கொள்ளும் வகையில் பா.ஜ.க.வுக்கு அடிமையாக சேவகம் செய்த பழனிசாமி எல்லாம் பேசுவதற்குக் கொஞ்சமும் தகுதி இல்லாதவர். இப்போதும், அமித்ஷா ஆட்டுவிக்கும் ஆட்டத்துக்கு ஆடும் பொம்மையாகச் செயல்பட்டு வருபவர்தான் பழனிசாமி என்பதை அவரது கட்சிக்காரர்களே அறிவார்கள்.

அ.தி.மு.க. ஆட்சி எப்போது வரும் என்ற மன நிலையில் மக்கள் இருப்பதாக பழனிசாமி பேசி இருக்கிறார். 2019 நாடாளுமன்ற தேர்தல், 2019-ல் நடந்த 22 சட்டமன்றத் தொகுதிகளின் இடைத்தேர்தல், 2019-ல் நடைபெற்ற ஊரக உள்ளாட்சி தேர்தல், 2021 சட்டமன்ற தேர்தல், 2021-ல் நடந்த 9 மாவட்ட ஊரக உள்ளாட்சி தேர்தல், 2022-ல் நடந்த நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல், ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் என 8 தேர்தல்களில் அ.தி.மு.க. தோல்வி அடைந்தது. எடப்பாடி பழனிசாமி வசம் அ.தி.மு.க வந்த பிறகு தொடர்ச்சியாகத் தேர்தல் தோல்விகளைச் சந்தித்து வருகிறது அ.தி.மு.க.

தோல்வியைத் தோளில் போட்டு வளர்த்து வருகிறவர் பழனிசாமி. அவரால் அ.தி.மு.க.வை அரை அங்குலம் கூட வளர்க்க முடியாது என்பது அக்கட்சியினருக்கே தெரியும். வரப்போகிற நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 தோல்வியைத் தழுவி 'தோல்விசாமி' என்பதை அவர் மெய்ப்பிக்கத்தான் போகிறார். இதனை நாடு பார்க்கத் தான் போகிறது.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி தெரிவித்தார்.



முரசொலி விநியோகப் பிரிவில் பணிபுரிந்த என்.கண்ணன் உடல் நலக்குறைவால் 25–12–2023 அன்று மறைவெய்தினார். இதையடுத்து திருவண்ணாமலை மாவட்டம் மேட்டுப்பாளையம் கிராமத்தில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்று சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. மறைந்த அன்னாரது திருவுடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து, அவரை இழந்து வாடும் குடும்பத்தார் – நண்பர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார். உடன் கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.



## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட்ட
## “உடன்பிறப்புகளாய் இணைவோம்”என்ற மாபெரும் முன்னெடுப்புடன்
## “முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவள விழா ஆண்டு”
## புதிய உறுப்பினர் சேர்த்தல் பணிகள் முடிந்து

# புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் வழங்கல்!

## (இரண்டாம் கட்டம்!)

## தலைமைக் கழக அறிவிப்பு

இந்திய வரலாற்றில் ஜனநாயக முறைப்படி உறுப்பினர் சேர்த்தலும் புதுப்பித்தலுமான பணிகள் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து வார்டு கிளைகள், ஊராட்சி, பேரூர், ஒன்றிய, நகர, பகுதி, நகரிய, மாவட்ட, மாநகர் மாவட்ட, மாநில அமைப்புகள், தலைமைக் கழகம் ஆகியவற்றுக்கு தேர்தல் நடத்தி, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்து அமைப்புக்களை செயற்படுத்தும் கட்சி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நாடறியும். ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 140 வார்டு கழகங்களையும், 1 கோடியே 10 இலட்சத்திற்கு மேல் உறுப்பினர்களையும் கொண்ட தி.மு.கழகம்.

“தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் அரை நூற்றாண்டு காலம் கட்டி காத்த நம் கழகத்தை மேலும் வலிமைப்படுத்த, மேலும் ஒரு கோடி உறுப்பினர்கள் சேர்க்க “உடன்பிறப்புகளாய் இணைவோம்” என்ற மாபெரும் முன்னெடுப்பு கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட உள்ளது. ஏற்கனவே, ஒரு கோடி உறுப்பினர்களைக் கொண்ட பேரியக்கத்தில், புதிதாக மேலும் ஒரு கோடி உறுப்பினர்களைச் சேர்க்கும் பெருமுயற்சியை ஏப்ரல் 3 ஆம் தேதியன்று தொடங்கி, ஜீன் 3, 2023 தலைவர் கலைஞர் நூற்றாண்டு தொடங்குவதற்குள் இப்பணியை நிறைவேற்றுவதென இக்கூட்டம் நிறைவேற்றிடும் வகையில், துண்டறிக்கைகள் மூலமாகவும், திண்ணைப் பிரச்சாரங்கள் மூலமாகவும், முக்கிய இடங்களில் முகாம்கள் அமைப்பது மூலமாகவும், வீடு தோறும் தேடிச் சென்றும் புதிய உறுப்பினர்களைச் கழகத்தில் இணைத்திடுவோம்.” என கழகத்

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், கடந்த 22.3.2023 அன்று நடைபெற்ற ‘தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில்’ நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி,

2023 ஏப்ரல் 3ஆம் தேதி முதல் 2023 ஜீன் 3ஆம் தேதி வரை, “முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவளவிழா ஆண்டு” உறுப்பினர்களை சேர்த்தல் பணிகளை” உடன்பிறப்புகளாய் இணைவோம்” என்ற மாபெரும் முன்னெடுப்புடன் ஒரு கோடி புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. கழகத் தோழர்கள் மற்றும் நிர்வாகிகளும் மேற்குறிப்பிட்ட தேதி முதல் உறுப்பினர்களை சேர்க்கும் பணியினைத் தொடங்கி, உடனுக்குடன் படிவங்களை தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்தனர்.

அவ்வாறு தலைமைக் கழகத்தில் வரப் பெற்ற படிவங்கள் முறைப்படி பரிசீலனை செய்யப்பட்டு, புதியதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை தலைமைக் கழகம் தயாரித்துள்ளது.

முதற் கட்டமாக, தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட இரசீது எண். 1 முதல் எண்.1000 வரை இப்புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்கள் கடந்த

7-11-2023 முதல் 10-11-2023 தேதிகளில் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து;

தற்போது, இரண்டாவது கட்டமாக, **தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட இரசீது எண். 1001 முதல் 2100 வரை எண் கொண்ட இரசீதுகள்** வைத்திருப்போர் கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் இருக்குமேயானால், அந்த ஒரிஜினல் இரசீதையும், தங்களிடம் உள்ள உறுப்பினர் சேர்த்தல் பட்டியலையும், **2023 டிசம்பர் 27ஆம் தேதி முதல் 30ஆம் தேதிக்குள்**, தலைமைக் கழகத்திற்கு நேரில் வந்து, இரசீது எண்ணையும், பட்டியலையும் சரி பார்த்து பெற்றுச் செல்ல வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

புதிய உறுப்பினர்களை சேர்த்து பணம் செலுத்தி இரசீது பெற்றவர்கள், நேரில் வந்து உறுப்பினர் சீட்டுகள் பெற முடியாத நிலை ஏற்படுமாயின், அவர்களால் நியமித்து அனுப்பப்படும் முகவரிடம், தாங்கள் கைப்பட எழுதிய பரிந்துரை கடிதமும், ஒரிஜினல் இரசீதையும் கொடுத்து புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளலாம். இரசீதின் ஜெராக்ஸ் நகல் ஏற்றுக் கொள்ளப்படாது.

புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை, தலைமைக் கழகத்தில் பெற்றுக் கொண்டவர்கள், உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை உரியவரிடம் ஒப்படைத்து, அதற்குரிய அத்தாட்சி கடிதத்தை பெற்று, அக்கடிதத்தினை ஒருவார காலத்திற்குள் தலைமைக் கழகத்திற்கு கண்டிப்பாக அனுப்பி வைத்திட வேண்டும்.

## உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கப்படும் மாவட்டங்கள்
## தலைமைக் கழக இரசீது எண். 1001 முதல் 2100 வரை

1) சென்னை வடக்கு
2) சென்னை வடகிழக்கு
3) சென்னை கிழக்கு
4) சென்னை மேற்கு
5) சென்னை தென்மேற்கு
6) சென்னை தெற்கு
7) திருவள்ளூர் கிழக்கு
8) திருவள்ளூர் மேற்கு
9) காஞ்சிபுரம் வடக்கு
10) காஞ்சிபுரம் தெற்கு
11) விழுப்புரம் வடக்கு
12) கள்ளக்குறிச்சி தெற்கு
13) கடலூர் கிழக்கு
14) கடலூர் மேற்கு
15) தஞ்சை தெற்கு
16) திருவாரூர்
17) திருச்சி தெற்கு
18) பெரம்பலூர்
19) அரியலூர்
20) தருமபுரி கிழக்கு
21) தருமபுரி மேற்கு
22) கிருஷ்ணகிரி கிழக்கு
23) சேலம் கிழக்கு
24) சேலம் மத்திய
25) திருப்பூர் வடக்கு
26) ஈரோடு வடக்கு
27) நீலகிரி
28) மதுரை வடக்கு
29) மதுரை தெற்கு
30) தேனி தெற்கு
31) விருதுநகர் வடக்கு
32) தென்காசி வடக்கு
33) தென்காசி தெற்கு
34) தூத்துக்குடி வடக்கு

**குறிப்பு:** தலைமைக் கழக இரசீது எண். 2100 க்கு மேல்உள்ள இரசீதுகளுக்கான உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கும் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 600 018.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் 41.65 லட்சம் ரூபாய் மதிப்பிலான மளிகைப் பொருட்களை, அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்ட ஆட்சியர் சரயு மூலம் அனுப்பி வைத்தார். உடன் மாவட்ட செயலாளர் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ., செல்லகுமார் எம்.பி.,பி.முருகன், கே.ஆர்.கே.நரசிம்மன், நாகராஜ், கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன், பரிதா நவாப், கதிரவன், அஸ்லாம், நாகராசன், நவாப், கோவிந்தன்,தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி, சாந்தமூர்த்தி, ராஜேந்திரன்,அறிஞர், குமரேசன், பேரூர் கழக செயலாளர் ஜே.கே.எஸ்.பாபு, ஒன்றிய குழு தலைவர் உஷாராணி குமரேசன், பேரூராட்சித் தலைவர் அம்சவேணி செந்தில்குமார், சின்னசாமி, கே.வி.எஸ், சீனிவாசன், பி.டி.அன்பரசன், தினேஷ் ராஜன் உள்ளிட்ட ஏராளமானோர் உள்ளனர்.

### கிருஷ்ணகிரி மாவட்ட தி.மு.க. சார்பாக - மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் ஏற்பாட்டில்

# மழையால் பாதிக்கப்பட்ட தென் மாவட்ட மக்களுக்கு 41 லட்சத்தில் நிவாரணப் பொருள்கள்!

## அமைச்சர் அர.சக்கரபாணி கொடி அசைத்து அனுப்பி வைத்தார்!

கிருஷ்ணகிரி, டிச.28-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மாவட்ட செயலாளர் மதியழகன் எம்எல்ஏ ஏற்பாட்டில் 3 கட்டமாக தென்மாவட்டங்களில் மழையால் பாதிக்கப்பட்ட மக்கள் 4,800 குடும்பங்கள் பயன் பெறும் வகையில் 41.65 லட்சம் ரூபாய் மதிப்பிலான நிவாரணப் பொருட்களை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி கொடி அசைத்து அனுப்பி வைத்தார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அரசு விடுதி மாணவர்களுக்கும் 83.35 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் நிவாரணப் பொருட்களை கொடுத்துள்ளார் மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ.

மழை வெள்ளத்தால் பாதிப்படைந்த மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் அனுப்ப வேண்டுமென கழகத் தலைவர், தமிழக முதல்வர் அவர்களின் வேண்டுகோளின் படி கிருஷ்ணகிரி கிழக்கு மன்ற தி.மு.க. சார்பாக கடந்த 20 தினங்களுக்கு முன்பு கடும் புயல் மழையால் பாதிப்படைந்த சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்ட மக்களுக்கு அரிசி, பருப்பு, எண்ணெய், சர்க்கரை, உள்ளிட்ட மளிகை பொருட்களை எட்டு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பொருட்கள் அனுப்பப்பட்டன.

இதனைத் தொடர்ந்து கடந்த வாரம் திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் திடீரென பெய்த பெரும் மழையால் இந்த நான்கு மாவட்ட மக்கள் பெருமளவுக்கு பாதிப்படைந்தனர்.

தென் மாவட்ட மக்களுக்கு உதவிடும் வகையில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் 65.35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரிசி, பருப்பு, எண்ணெய், டீத்தூள், ரவை, மைதா, சர்க்கரை உள்ளிட்ட மளிகை பொருட்களும், துணிமணிகள், போர்வை உள்ளிட்டவைகளும் தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்டப் பொறுப்பு அமைச்சர் அர.சக்கரபாணி மாவட்ட ஆட்சியர் கே.எம். சரயு அவர்களிடம் ஒப்படைத்து தென் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டன.

இதுவரை சென்னை உள்ளிட்ட மாவட்டங்களுக்கும், தென் மாவட்டங்களுக்கும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மதியழகன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் 73.35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மழை நிவாரணப் பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளன. இது மட்டும் இல்லாமல் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அரசு விடுகதை விடுதிகளில் தங்கி படிக்கும் மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் பாய், தலையணை, போர்வை ஆகியவற்றை மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. தனது சொந்த நிதியிலிருந்து 10 லட்சம் ரூபாய் மதிப்பில் அமைச்சர் முன்னிலையில் மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் ஒய். பிரகாஷ் எம் எல் ஏ , நாடாளுமன்ற உறுப்பினர் செல்லகுமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பி.முருகன், கே.ஆர்.கே.நரசிம்மன், அவைதலைவர் நாகராஜ் , மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பரிதா நவாப், பொருளாளர் கதிரவன்

பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம்,நாகராசன், நகர செயலாளர் நவாப், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி, சாந்தமூர்த்தி , ராஜேந்திரன், அறிஞர், குமரேசன், பேரூர் கழக செயலாளர் ஜே.கே.எஸ். பாபு , ஒன்றிய குழு தலைவர் உஷாராணி குமரேசன் பேரூராட்சித் தலைவர் அம்சவேணி செந்தில்குமார்,

மேற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் சின்னசாமி , கழகப் பிரமுகர்கள் கே.வி.எஸ் ,சீனிவாசன், பி.டி.அன்பரசன் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்

தினேஷ் ராஜன், இளைய ராஜா, மாணிக்கம் , சங்கர், செந்தில்குமார் உள்ளிட்ட ஏராளமானோர் உடன் இருந்தனர். இந்த ஒரு மாதத்தில் மட்டும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் மழை நிவாரணம் மற்றும் விடுதிகளுக்கு உதவி கள் எண 83.35 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிவாரண உதவிகளை வழங்குவதற்கு உறுதுணையாக இருந்த கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட ஊராட்சி குழு தலைவர், ஒன்றிய குழு, நகராட்சி, பேரூராட்சி தலைவர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் உதவியோடு தனது சொந்த நிதியும் சேர்த்து இந்த நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளார் மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. இந்த நிவாரணப் பொருட்கள் அனைத்தையும் வழங்குவதற்கு உதவியாக இருந்த அனைவருக்கும் தனது நெஞ்சார்ந்த நன்றியை மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்

# அடுத்தவருக்கு உதவுவதில் கரைந்துபோனால் வெறுப்புணர்ச்சிகள் தோற்று, மானுடம் தழைக்கும்!

## மழை வெள்ளத்தின் போது உதவிய தென் மாவட்ட மக்களுக்கு நன்றி தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, டிச.28-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில் “அடுத்தவருக்கு உதவுவதில் கரைந்து போனால், வெறுப்புணர்ச்சிகள் தோற்று மானுடம் தழைக்கும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**நேசக்கரம் நீட்டி நிவாரணப் பணிகளுக்குத் தங்களை ஒப்படைத்துக் கொண்ட தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்ட மீனவர்களின் பண்பும், திருச்செந்தூர் விரைவு இரயில் பயணிகளைக் காப்பாற்றிய கிராம மக்களின் அன்பும்**, “THE BEST WAY TO FIND YOURSELF IS TO LOSE YOURSELF IN THE SERVICE OF OTHERS” **என்று தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்கள் சொன்னதை நினைவுபடுத்துகிறது.**

**அடுத்தவருக்கு உதவுவதில் கரைந்து போனால், வெறுப்புணர்ச்சிகள் தோற்று, மானுடம் தழைக்கும்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், படேல் நகரில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில், 61 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனை பட்டாவிற்கான ஆணைகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், நேற்று முன்தினம் (26.12.2023) வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், திருவரங்குளம் ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, ஆலங்குடி பேரூராட்சித் தலைவர் திருமதி.மு.ராசி முருகானந்தம், அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய வாக்குச்சாவடி முகவர் ஆய்வுக் கூட்டம் தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் வழிகாட்டுதலின்படி பாப்பிரெட்டிப்பட்டிதொகுதி பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பையர்நத்தம்,பி.பள்ளிப்பட்டி,பொம்மிடி ஊராட்சிக்குட்பட்ட வாக்குச்சாவடி முகவர்கள் பொறுப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் நடைபெற்றது. இதில் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் மாநில தொண்டரணி அணி துணை செயலாளர் சேலம் எஸ்.எம்.அன்பழகன் கலந்துகொண்டு வாக்குச்சாவடி முகவர் பணிகளை ஆய்வு செய்தார். உடன் மேற்கு மாவட்ட அவைத்தலைவர்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.மனோகரன்,ஒன்றிய கழக துணை செயலாளர் ஜாகிதாசெரீப், மாவட்ட பிரதிநிதி க.பன்னீர்செல்வம்,மற்றும் BLA2, பொறுப்பாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# ‘மிக்ஜாம்’ புயல் பேரிடர் : முதல்வரிடம் குவியும் நிவாரண நிதி!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (26.12.2023), தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வக்ஃப் வாரியத் தலைவர் அப்துல் ரஹ்மான் மற்றும் உறுப்பினர்கள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர் ப. அப்துல் சமது, திருமதி பாத்திமா முசாபர், முகமது பஷீர், எம்.கே. கான், சையது ரேகான் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 30 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை , நேற்று முன்தினம் (26.12.2023), தலைமைச் செயலகத்தில், எல்&டி நிறுவனத்தின் துணை செயல் தலைவர் எம்.வி. சதீஷ், மண்டல மேலாளர் கே.ஜி. சத்தியநாராயணன் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 3 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (26.12.2023), தலைமைச் செயலகத்தில், டி.எஸ்.எஃப். குழுமத்தின் இயக்குநர் ஸ்ரீவட்ஸ் ராம் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 2 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (26.12.2023), தலைமைச் செயலகத்தில், கேப்லின் நிறுவனத்தின் தலைவர் பார்த்திபன் மற்றும் இயக்குநர் தீனதயாளன் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (26.12.2023), தலைமைச் செயலகத்தில், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் பிரசன்ன குமார் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் சார்பில் 2 கோடி ரூபாயும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனப் பணியாளர்களின் ஒரு நாள் சம்பளத் தொகையான 2 கோடியே 30 இலட்சம் ரூபாயும், என மொத்தம் 4 கோடியே 30 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (26.12.2023), தலைமைச் செயலகத்தில், ஹுண்டாய் இந்தியா நிறுவனத்தின் தலைமை உற்பத்தி அதிகாரி சி.எஸ். கோபாலகிருஷ்ணன், மூத்த செயல் இயக்குநர் ஜே.எச்.லீ, துணைத் தலைவர் டி. சரவணன், கள தலைவர் எஸ்.விஜயபாஸ்கர் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 2 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (26.12.2023), தலைமைச் செயலகத்தில், முருகப்பா குழுமத்தின் முழு நேர இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் முத்து முருகப்பன், மூத்த துணைத் தலைவர் டி. கண்ணன் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 2 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (26.12.2023), தலைமைச் செயலகத்தில், செட்டிநாடு குழுமத்தின் தலைவர் எம்.ஏ.எம்.ஆர். முத்தையா சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (26.12.2023), தலைமைச் செயலகத்தில், வி.என்.சி. நிறுவனத்தின் மேலாண்மை பங்குதாரர் சி. பாஸ்கர் மற்றும் நிர்வாக குழுவினர் எல். அரிஹரபுத்திரன், அமித் சிங், பிரசாந்த் சின்ஹா, கவுஷிக் தத்தா ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.



மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியில் 19ஆம் ஆண்டு சுனாமி நினைவு தினத்தை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்டக்கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமையில் மலர் வளையம் வைத்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். உடன் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், பி.எம்.அன்பழகன், அமுர்த.விஜயகுமார், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர் மற்றும் பலர் உள்ளனர்.

## கிளாம்பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள

# கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் திறப்பு விழா: முன்னேற்பாட்டுப் பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, டிச. 28 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (26.12.2023) சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம் பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்" திறப்பு விழாவிற்கான முன்னேற் பாடுப் பணிகள் குறித்து காவல்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் போக்குவரத்துத் துறையுடன் இணைந்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கிளாம் பாக்கம் பேருந்து முனையத்தை திறந்து வைப்பதற்கான முன்னேற்பாடுப் பணிகள் குறித்து காவல் துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் போக்கு வரத்துத் துறை அலுவலர்களுடன் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை செய்தார்.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர் சி.சமயமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் தி.மு.க. சார்பில் 19ம் ஆண்டு சுனாமி நினைவு தினத்தை முன்னிட்டு நாகை துறைமுகம் அருகே சுனாமி நினைவு ஸ்தூபியில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மலர் வளையம் வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.ராஜேந்திரன், ப.கோவிந்தராசன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆரூர்மணிவண்ணன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளனர்.

## புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடியில்

# "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின்கீழ் மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேரில் பார்வையிட்டார்!

புதுக்கோட்டை, டிச. 28 -

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி பேரூராட்சி, ராஜசங்கீதா திருமண மண்டபத்தில், "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின்கீழ், மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 22.12.2023 அன்று பார்வையிட்டார்.

மேலும் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட மனுதாரருக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் பட்டா மாறுதலுக்கான ஆணையினை வழங்கினார்.

பின்னர் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது;

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்று சேரும் வகையில் "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டத்தை 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார்கள். அந்தவகையில் கறம்பக்குடி பேரூராட்சி, ராஜசங்கீதா திருமண மண்டபத்தில், "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின்கீழ், மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாம் பார்வையிடப்பட்டது.

அதன்படி, "மக்களுடன் முதல்வர்" என்ற இப்புதிய திட்டத்தின் கீழ், பொதுமக்கள் அதிகமாக அணுகும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நகராட்சி நிர்வாகத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கூட்டுறவுத்துறை, மகளிர் மேம்பாட்டுக் கழகம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, எரிசக்தி துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை ஆகிய 13 அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெற்று தீர்வு காண்பதற்கு முகாம்கள் நடத்தப்படுகிறது.

இந்த சிறப்பு முகாம்களில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் அனைவரும் ஒரே குடையின்கீழ் மக்களின் கோரிக்கைகளைப் பெற்று பதிவு செய்வார்கள். முகாம்களில் பெறப்படும் மனுக்கள் அனைத்தும், சம்பந்தப்பட்ட துறைகளால் 30 தினங்களுக்குள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும்.

மேலும் அனைத்து தரப்பு மக்களுக்கும் மேற்கண்ட 13 அரசுத் துறைகளின் சேவைகள் எளிதில் கிடைத்திடவும், தாமதங்களை தவிர்த்திட வேண்டும் என்பதும் தான் இந்த திட்டத்தின் நோக்கமாகும். இந்த சிறப்பு முகாம்களில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் அனைவரும் ஒரே குடையின்கீழ் மக்களின் கோரிக்கைகளைப் பெற்று பதிவு செய்வார்கள். முகாம்களில் பெறப்படும் மனுக்கள் அனைத்தும், சம்பந்தப்பட்ட துறைகளால் 30 தினங்களுக்குள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும்.

எனவே பொதுமக்கள் அனைவரும் தங்களுக்குத் தேவையான கோரிக்கைகளை மனுக்களாக அளித்து, பயன்பெற்றுக் கொள்ளலாம் என அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

முன்னதாக, அமைச்சர் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கொத்தக் கோட்டை கிராமத்தில், நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.62.14 இலட்சம் மதிப்பீட்டில் வேங்கிடகுளம் சாலை முதல் கொத்தக் கோட்டை ஊராட்சிமன்ற அலுவலகம் செல்லும் சாலை பணியினை அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) மு.செய்யது முகம்மது, மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜி.அமீர் பாஷா, பேரூராட்சித் தலைவர் முருகேசன், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திர சேகரன், அட்மா கமிட்டித் தலைவர் வெ.முத்து கிருஷ்ணன், பேரூராட்சி துணைத்தலைவர் நைனா முகமது, வட்டாட்சியர் நாகநாதன், பேரூராட்சி செயல் அலுவலர் கார்த்திகேயன், வட்டார வளர்ச்சி அலுவலர் ரமேஷ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திருச்சி பன்னாட்டு

# விமான நிலையத்தில் புதிய முனையம்!

## அமைச்சர் கே.என்.நேரு ஆய்வு!

திருச்சி, டிச. 28 -

திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய முனையத்தை அமைச்சர் கே.என். நேரு பார்வையிட்டார்.

திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் ரூ. 951 கோடியில் புதிய முனையம் அமைக்கும் பணியை கடந்த 2019ஆண்டு பிப். 10 ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி காணொலி காட்சி வாயிலாக தொடக்கி வைத்தார்.

இப் பணிகள் 2021ஆவது ஆண்டு செப்டம்பர் மாதத்துக்குள் முடித்து புதிய முனையத்தை செயல்பாட்டுக்குக் கொண்டு வர விமான நிலைய ஆணையக் குழுமம் திட்டமிட்டிருந்தது. ஆனால், கொரோனா பரவல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பணிகள் முற்றுப்பெறாத நிலையில் 2021, 22, 23 ஆகிய மூன்றாண்டுகளும் தள்ளிப்போயின. அடுத்தடுத்து 2 அல்லது 3 முறை திறப்பு விழாவுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிலையிலும் பணிகள் முடிவடையாததால் திறப்பு விழா நடத்தப்படவில்லை. இதனைத் தொடர்ந்து, கூடுதலான பணியாளர்கள் மூலம் கடந்த சில மாதங்களாக இரவு, பகலாக நடைபெற்ற பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன.

புதிய முனையத்தின் சிறப்பம்சம்: புதிதாக அமைக்கப்பட்டுள்ள முனையம் 60 ஆயிரத்து 723 ச.மீ. பரப்பளவில் 2 அடுக்குகளைக் கொண்ட வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஒரே நேரத்தில் 4 ஆயிரம் பன்னாட்டு பயணிகளையும், 1,500 உள்நாட்டு பயணிகளையும் கையாளக் கூடிய வகையில் குடியேற்றப் பிரிவினருக்கான 40 செக் அவுட் மற்றும் 48 செக் கவுன்ட்டர்கள், விமானங்கள் நிறுத்த 10 ஏப்ரான்கள் மற்றும் ஏரோ பிரிட்ஜ் (விமானத்திலிருந்து முனையத்தில் நுழையும் பகுதி), 26 இடங்களில் லிப்ட் மற்றும் நகரும் படிக்கட்டுகள் (எஸ் கலேட்டர்), சுங்கத்துறையினருக்கென 3 சோதனை மையங்கள், 15 இடங்களில் எக்ஸ்ரே சோதனை மையங்கள், 3 இடங்களில் வி.ஐ.பி. காத்திருப்பு அறைகளுடன், விமான நிலைய வளாகத்தில் சுமார் 1,000 கார்களை நிறுத்தும் வகையில் வாகன நிறுத்தம் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் தேசத்தின் நாகரிகம், கலாச்சாரம், பண்பாடுகளை பறைசாற்றும் விதமாக நிலைய வளாகத்தில் வண்ண ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் போன்ற மாதிரி கோபுரம் புதிய முனையத்தின் முன்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இதேபோல, வருகை, புறப்பாடு, பயணிகள் காத்திருப்பு அறைகள் போன்ற பகுதிகளில் புதிய அதிநவீன வசதிகளுடன் உள்கட்டமைப்பு மற்றும் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் வகையில் புதிய முனையத்தின் மேற்கூரை அமைக்கப்பட்டுள்ளது. இதுதவிர ரூ.75 கோடி செலவில் சுமார் 42.5 மீ உயரம் கொண்ட கண்காணிப்பு கோபுரத்துடன் கூடிய வான் கட்டுப்பாட்டு அறையும் அமைக்கப்பட்டுள்ளது.

இத்தனை சிறப்பம்சங்களைக் கொண்டுள்ள இந்த புதிய முனையம் ஜனவரி 2 ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைக்கவுள்ளார்.

இது தொடர்பாக ஆலோசனைக்கூட்டமும் நடைபெற்றது. மேலும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மாநகர காவல் ஆணையர் காமினி தலைமையில் காவல்துறையினர் கடந்த இரண்டு நாள்களாக ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்..

இந்நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் புதிய விமான நிலைய முனையத்திற்கு வர இருப்பதால் அதற்கான முன்னேற்பாடுகள் பணிகள் குறித்து நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு விமான நிலைய அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்..

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார் மாநகர காவல் ஆணையர் காமினி மாநகராட்சி ஆணையர் வைத்திநாதன் மாநகராட்சி மேயர் அன்பழகன் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

# நாகையில் சுனாமி 19ஆம் ஆண்டு நினைவு தினம்!

## மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் மலர்வளையம் வைத்து அஞ்சலி!

நாகை, டிச. 28 -

நாகை மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் தி.மு.க. சார்பில் 19ம் ஆண்டு சுனாமி நினைவு தினத்தை முன்னிட்டு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் தலைமையில் நாகை பழைய பேருந்து நிலையம் மறைமலை அடிகளார் சிலையில் இருந்து அமைதி பேரணி தொடங்கி கடைத் தெரு வழியாக நாகை துறைமுகம் வந்தடைந்தது. அதைத் தொடர்ந்து அங்கு உள்ள சுனாமி நினைவு ஸ்தூபிக்கு மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.ராஜேந்திரன், ப.கோவிந்தராசன் மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி.மனோகரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆரூர்மணிவண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.பாண்டியன், இல.பழனியப்பன், கோ.சிவக்குமார், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, எம்.ஆர். செந்தில்குமார், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என்.ஆனந்த், கே.பழனியப்பன், மகா.குமார், தாமஸ்ஆல்வாஎடிசன், ஆர்.டி.எஸ்.சரவணன், சோ.பா.மலர்வண்ணன், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன் பேரூர் கழகச் செயலாளர்கள் கா. அட்சயலிங்கம், முகமது சுல்தான், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இரா.முருகையன், பி.என். கார்த்தி, ஆர்.துரைராஜ், தமயந்தி, பாரிபாலன், சுரேந்தர், தினோஷ், பெ.முருகானந்தம், சாகுல் ஹமீதுராஜா, ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, குலோத்துங்கன், எஸ்.பால்ராஜ், எஸ்.வி.டி.அருள், கேஸ் வி.செந்தில், மாவட்ட கலை இலக்கிய பேரவை தலைவர் இரா.தங்கதுரை, மாவட்ட இலக்கிய அணி தலைவர் சித.கருணாநிதி, மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் விமல்மொக்கை, கேப்ஸ் ரவி, கலையரசன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

## சுனாமியால் உயிரிழந்தோரை நினைவில் ஏந்தி

# காலநிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொள்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலை தளத்தில் பதிவு!

சென்னை, டிச. 28 -

ஆழிப்பேரலையின் 19 ஆம் ஆண்டையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளப் பக்கத்தில் கால நிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொள்வோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆழிப்பேரலையின் 19 ஆம் ஆண்டையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

பல்லாயிரம் பேரின் வாழ்வைப் புரட்டிப் போட்டு, தமிழ்நாட்டை மீளாத்துயரில் ஆழ்த்திய ஆழிப்பேரலையின் 19ஆம் ஆண்டு!

சுனாமியால் உயிரிழந்தோரை நினைவில் ஏந்தி, காலநிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொள்ளும் ஆக்கபூர்வமான திட்டங்களுடன் இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்ளும் கட்டமைப்புகளை உருவாக்குவோம்! அதன் முதல் படியாக இயற்கையைக் காக்க உறுதி யேற்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமை! டி.ஆர்.திலீபன் ஏற்பாட்டில்

# திருவள்ளூரில் மாநில அளவிலான ஆணழகன் போட்டி!

## அமைச்சர் ஆர்.காந்தி – எஸ்.ஜெகத்ரட்சகன் போட்டியை துவக்கி வைத்து பரிசளிப்பு!

## வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவள்ளூர், டிச. 28 -

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் மாநில அளவிலான ஆணழகன் போட்டி திருவள்ளூரில் உள்ள ஐ.ஆர்.என். மற்றும் ஐ.வி.ஆர். ஆகிய திருமண மண்டபத்தில் டிசம்பர் 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் மாவட்டச் கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது.

இதில் வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ., நகரக் கழகச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், ம.கிரண், தா. மோதிலால், டி.எம்.சுகுமார், டி.கே. பாபு, ம.புவனேஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இதில் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆணழகன் டி.ஆர். திலீபன் வரவேற்புரை ஆற்றுகிறார் இந் போட்டியில் அமைச்சர் ஆர்.காந்தி முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்பி, ஆகியோர் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிக்கிறார்கள்.

இளைஞரணி துணை செயலாளர்கள் எஸ். ஜோயல், பிரபு கஜேந்திரன், ப.அப்துல்மாலிக், திருத்தணி எம்.பூபதி, கே. திராவிட பக்தன், ஆர்.டி.இ. ஆதிசேசன், ஒ.ஏ.நாக லிங்கம், இ.குருதாஸ், வி.சி. ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன் சக்ரவர்த்தி, ப. சிட்டிபாபு, எஸ்.கே. ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், இராஜேஸ்வரி ரவீந்திரநாத் உள்பட பலர் கலந்து கொள்கின்றனர். ஆ.பவள வண்ணன் நன்றி கூறுகிறார்.



கன்னியாகுமரி முதல் பனாரஸ் வரையிலும் செல்லும் வாராந்திர "காசி தமிழ் சங்கம் விரைவு இரயில்", கும்பகோணத்திற்கு வருகை தந்தபோது, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க. அன்பழகன் ஆகியோர் தலையையில் இரயிலை இயக்கி வந்த லோகோ பைலட்கள் ஜோதி பாண்டியன் மற்றும் சுரேந்திரன், மேலாளர் சேரன் ஆகியோர் பூங்கொத்து கொடுத்தும், பயணிகளுக்கு இனிப்புகள் வழங்கியும் வரவேற்றார்கள். இந்நிகழ்வில், கும்பகோணம் மாநகராட்சி துணை மேயர் சு.ப.தமிழழகன், கும்பகோணம் ஒன்றிய தி.மு.க. செயலாளர்கள் மத்தியம் தி.கணேசன், கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஜெ.சுதாகர் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட ரயில்வே உபயோகிப்பாளர்கள் சங்கத்தினர், கும்பகோணம் அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் மாநகர தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை ப. கோபால்
### டிசம்பர் 28 (1972)



கோவை நகரக் கழகச் செயலாளராகவும் – கோவை மேற்கு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றவர்.

"அண்ணா வழியில் அயராது உழைத்து கழகத்தின் கொள்கைகளை உள்ளத்தில் பதியவைத்து, எந்தச் சூழ்நிலையிலும் கட்டுப்பாட்டை மீறாமல் பணியாற்றிய அன்புத் தங்கம்" என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.





விடுதலைப் போராட்டத் தியாகியும் முதுபெரும் கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவருமான 'தகைசால் தமிழர்' அய்யா நல்லகண்ணு அவர்களின் 99ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, அவரை அவரது இல்லத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். அப்போது மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரித்த பொருட்களை நல்லக்கண்ணு அவர்களுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். அதுபோது விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் உடனிருந்தார்.

### இளைய தலைமுறையினருக்கு விஞ்ஞான வாசலைத் திறந்துவிடும்

# கவிப்பேரரசு வைரமுத்துவின் 'மகா கவிதை'!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஜனவரி 1 - அன்று வெளியிடுகிறார்!

சென்னை, டிச. 28-

கவிப்பேரரசு வைரமுத்துவின் புதிய படைப்பான 'மகா கவிதை' நூலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஜனவரி 1ஆம் தேதி வெளியிடுகிறார்.

இவ்விழா சென்னைக் காமராசர் அரங்கில் மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது. நூலின் முதற்படியை ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் பெற்றுக் கொள்கிறார். கலைஞானி கமல்ஹாசன், விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை இருவரும் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

கவிப்பேரரசு வைரமுத்து ஏற்புரை ஆற்றுகிறார்.

'மகா கவிதை' என்பது நிலம், நீர், காற்று, தீ, வெளி என்ற ஐம்பூதங்கள் பற்றிய ஐந்து நெடுங் கவிதைகளின் பெருந்தொகுப்பு ஆகும். கவிப்பேரரசு வைரமுத்துவின் 30 மாதக் கடும் உழைப்பினால் உருவானது இந்தக் கவிதைநூல்.




**விஞ்ஞான வாசலைத் திறந்துவிடும் 'மகா கவிதை'!**

"அகவியல் - புறவியல் - அறவியல் இறையியல் என்றெல்லாம் பேசிய தமிழ்க் கவிதை முதன்முதலில் முழுக்க அறிவியல் பேசுகிறது. ஐம்பூதங்களின் அறிவியலும் ஈராயிரமாண்டு நீண்டு கிடக்கும் தமிழ்க் கவிதையின் அழகியலும் ஒருங்கிணைந்த பெருங்கவிதை மகா கவிதை. இளைய தலைமுறையின் எதிர்காலத்திற்கு இந்த மகா கவிதை விஞ்ஞான வாசலைத் திறந்துவிடும்" என்று கவிப்பேரரசு வைரமுத்து உறுதிபடத் தெரிவிக்கிறார்.

**ரூ. 5 லட்சம் பரிசு!**

மகா கவிதை என்ற தலைப்பின் ஐந்து எழுத்துக்களிலும் இந்த நூலின் ஐந்து உள்ளடக்கங்கள் மறைந்திருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்துச் சரியான விடை சொல்பவர்க்கு ஐந்து லட்சம் பரிசு என்று கவிப்பேரரசு வைரமுத்து ஏற்கெனவே அறிவித்திருந்தார்.

அந்தப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் மேடையிலேயே அறிவிக்கப்படுவார்கள் மற்றும் முதலமைச்சர் கரங்களால் பரிசு பெறுவார்கள்.

கவிப்பேரரசு வைரமுத்துவின் பதிப்பகமான 'சூர்யா இலக்கியம்' இந்நூலை வெளியிடுகிறது. வெற்றித் தமிழர் பேரவைத் தோழர்கள் விழாவிற்கான ஏற்பாடுகளை முனைந்து செய்து வருகிறார்கள்.




தூத்துக்குடி மாவட்டத்தில் கடும் வெள்ள பாதிப்பு பகுதிகளை பார்வையிட்ட ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன், மழை வெள்ளம் பாதிப்பு – நிவாரண உதவி – பணி குறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றார். இதில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, ஒன்றிய இணை அமைச்சர் முருகன், கழக நாடாளுமன்றக் கழகக் குழு துணைத் தலைவரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி, துறைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், மாவட்ட ஆட்சியர் கோ. லட்சுமிபதி உள்ளிட்ட அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.




பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் **பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம்.**

# 50 இடம் பொருள் கலைஞர்



# பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம்

‘பழம்படு பனையின் கிழங்கு பிழந்தன்ன’ என ‘நாரைவிடு தூது’வும், ‘மடலேறுதல்’ என தொல்காப்பியமும், ‘இரும்பனம் புடையல் ஈகை வாங்கல்’ என ‘பதிற்றுப்பத்து’ம் பனையைப் பாடியிருக்கின்றன. திருக்குறளின் முப்பாலிலும் பாடப்பட்டது பனைமரம், திருக்குறள் எழுதப்பட்டதே பனை ஓலையில்தான்.



இப்படிப் பனையைப் பாடாத சங்க இலக்கியங்களே இல்லை. அந்த அளவுக்கு தமிழர் வாழ்வோடு கலந்துவிட்ட ஒன்று பனை. நீலகிரியைத் தவிர, தமிழ்நாட்டின் மற்ற அனைத்து மாவட்டங்களிலும் பனைத் தொழிலாளர்கள் இருக்கின்றனர். நீர் பாய்ச்சத் தேவையில்லை, உரமூட்ட அவசியமில்லை, பூச்சிக்கொல்லிகளைத் தெளிக்க வேண்டிய கட்டாயமும் இல்லை. பதநீர், நீராபானம், ஓலை, நுங்கு, கட்டை, நார் என பனையில் பயனில்லாத பகுதி ஒன்று என இல்லவே இல்லை.

## பனை மரங்களின் எண்ணிக்கை

ஆனால், அறிவியல் வளர வளர, உலகம் நவீனமடைய நவீனமடைய பனையும், பனைசார்ந்த பொருட்களும் நம்மை விட்டு விலகிக்கொண்டே சென்றன. அன்று பனையால் வேயப்பட்ட கூரை வீடுகள் இன்று சிமெண்ட் வீடுகளாக மருவியிருக்கின்றன. கருப்பட்டி ஒன்றே இனிப்புக்கான மூலமாக இருந்த காலம் மாறி, இன்று ஆலைக் கரும்புகளால் சர்க்கரை உற்பத்தி அபரிமிதமாகிவிட்டது.

‘கள்’ ஒன்றே மதுவாக இருந்த நிலைமை மாறி, உள்ளூர் முதல் உலக நாடுகள் வரை எத்தனையோ மதுபான ஆலைகள் முளைத்துவிட்டன. இப்படியான நவீனமயமாதல் காரணங்களால், பனைசார்ந்த பொருட்களுக்கான தேவை குறைந்து, பனைத் தொழிலாளர்கள் வாழ்வில் இருள் சூழ்ந்தது. பனை மரங்களின் எண்ணிக்கையும் குறையத் தொடங்கியது. சந்தைப்படுத்துதலுக்கும் வாய்ப்புகள் குன்றியதால், பலர் அத்தொழிலை விட்டு, வெளியேறத் தொடங்கினர்.

வருமானம் குறைந்து, சந்தை வாய்ப்புகளும் சரிந்ததால், பனை சார்ந்த தொழிலில் ஈடுபடுவோரின் எண்ணிக்கையும் குறைய ஆரம்பித்தது. நலிந்துபோன இத்தொழிலாளர்களின் நலனுக்காக எண்ணற்ற குரல்கள் ஒலித்தன.

## துயரக்குரல்கள்

எவர் கண்ணிலும் படாத துன்ப-துயரங்கள் கலைஞர் கண்ணில் மட்டும் எளிமையாய் பட்டுவிடும். அப்படித்தான் பனைத் தொழிலாளர்களின் துயரக் குரலும் கலைஞர் காதுகளை எட்டின.

பனைத் தொழிலாளிகளின் குடும்பங்கள் படும் வேதனைகள் கலைஞர் கண்களில் விழுந்தன.

2006-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1-ஆம் தேதி, கலைஞர் பனைத் தொழிலாளர்களுக்கான தனி நலவாரியத்தைத் தொடங்கினார். அதன் தலைவராக குமரி அனந்தன் நியமிக்கப்பட்டார். எந்த அங்கீகாரமும் இல்லாமல் இருந்த பனைத் தொழிலாளர்களுக்கு, இந்த அமைப்புசாரா நலவாரியம் பல வழிகளில் பேருதவியாய் அமைந்தது.

## பதநீர் விற்கும் முறை

பனைத் தொழிலாளர்கள் அதிகம் நிறைந்த ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் பதநீர் குளிரூட்டும் நிலையம் அமைத்துக் கொடுத்தார். பதநீருக்கான கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு 4 ரூபாயில் இருந்து 10 ரூபாய் வரை உயர்த்தினார். பதநீர் இறக்க, ஓராண்டுக்கு மட்டுமே உரிமம் என்பதைத் திருத்தியமைத்து 3 ஆண்டுகளாக உயர்த்தினார்.

பதநீர், பனைவெல்லம் கொள்முதலுக்காகவும், நியாயமான விலை கிடைக்கவும், ஒரு கோடி ரூபாயை மானியமாக வழங்கினார். பதநீர் நீண்ட நாட்கள் கெடக்கூடாது என்பதற்காக, இந்தியாவிலேயே முதன்முறையாக ‘டெட்ரா பேக்’-இல் அடைத்து பதநீர் விற்கும் முறையை அறிமுகப்படுத்தினார்.

பனங்கற்கண்டு மிட்டாய்களைத் தயாரிக்கச் செய்து நியாய விலைக்கடைகள், பல்பொருள் அங்காடிகளில் விற்பனை செய்ய வழிவகுத்தார். பனைத் தொழிலாளர்களுக்கு இயந்திரம் மூலம் மரம் ஏறுவதற்கான பயிற்சி வழங்க உத்தரவிட்டார்.

## 40 ஆயிரம் பேர் பதிவு!

இவ்வாறாகப் பனைத் தொழிலாளர்களின் வாழ்வில் வெளிச்சம் பாய்ச்சும் பல திட்டங்களை வகுத்து, செம்மையாகச் செயல்படுத்தினார் கலைஞர். அதன் பயனாய், பனைத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் முதல் ஆண்டுக்குள்ளேயே 40,000-க்கும் அதிகமான தொழிலாளர்கள் பதிவு செய்தனர்.

மாவட்டம்தோறும் விழிப்புணர்வு ஏற்படுத்தி, உறுப்பினர் சேர்க்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பனைத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித்தொகை, ஓய்வூதியம், விபத்துக் காப்பீட்டு வசதிகள் எனப் பல்வேறு நலத்திட்டங்கள் நலவாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டன.

வறட்சியில் காய்ந்துபோன சருகுகளுக்கு மத்தியில், கொட்டிய மழைக்குப் பின் துளிர்க்கும் அரும்பாய் வசந்தம் பெறத் தொடங்கிய பனைமரத் தொழிலாளர்கள் வாழ்வில், மீண்டும் வறட்சியை வலிந்து திணித்தது 2011-இல் ஜெயலலிதாவின் ஆட்சிக்காலம்.

2012-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18-ஆம் தேதி காலாவதியான பனைத் தொழிலாளர்கள் நலவாரிய உறுப்பினர்களின் பதவிக்காலத்தைத் திருத்தியமைக்காமல் காலாவதியாக்கியது அ.தி.மு.க அரசு. ஆட்சியில் இருந்த 10 ஆண்டுகளும் நலவாரியத்தைப் புதுப்பிக்க எள் முனையளவு முயற்சியைக் கூட கிள்ளிப்போட மறுத்தது அ.தி.மு.க அரசு.

மீண்டும் 2021-இல் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்தவுடன், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நலவாரியத்துக்குப் புத்துயிர் கொடுத்தார் நமது முதலமைச்சர் அவர்கள்.

2022-ஆம் ஆண்டு ஜூன் 14-ஆம் தேதி எர்ணாவூர் நாராயணன் தலைமையில் நலவாரியம் அமைக்கப்பட்டு, அலுவல்சார் உறுப்பினர்கள், அலுவலர்சாரா உறுப்பினர்கள், வேலையளிப்போர் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர். 10 ஆண்டுகால இடைவெளியால் தொய்ந்துப்போன நலவாரியத்தில், மீண்டும் உறுப்பினர் சேர்க்கை தொடங்கப்பட்டு, மாவட்டம்தோறும் முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

2021-22 வேளாண் பட்ஜெட்டில் ‘பனை மேம்பாட்டு இயக்கம்’ என்ற தனி இயக்கம் அறிவித்து, 30 மாவட்டங்களில் 76 லட்சம் பனை விதைகள், 1 லட்சம் பனங்கன்றுகள் முழுமானியத்தில் வழங்கப்பட்டன. 2022-23 வேளாண் பட்ஜெட்டின்படி, ரூ.2.02 கோடியில் இந்த இயக்கம் விரிவுபடுத்தப் பட்டது.

## பனைப்பொருள் வளர்ச்சி வாரியம்

124 இடங்களில் மதிப்புகூட்டப்பட்ட பனைப் பொருட்கள் தயாரிப்புக் கூடங்கள் அமைக்கப்பட்டன. பனைப்பொருள் வளர்ச்சி வாரியம் சார்பில் பனைவெல்லம், பனங்கற்கண்டு, பிற பனைசார் பொருட்களைத் தூய்மையான முறையில் தயாரிக்கப் பயிற்சி, மகளிருக்குப் பனை ஓலைப் பொருட்கள் தயாரிக்கப் பயிற்சி வழங்கப்பட்டுப் பனைத்தொழிலுக்குப் புத்துயிர் கொடுத்திருக்கிறது ‘திராவிட மாடல் அரசு’.

மரம் ஏறுவதற்கான கருவிகளையும் வழங்கி வருகிறது, கழக அரசு. ரேசன் கடைகளில் பனைவெல்லம், கருப்பட்டி விற்பனையையும் தொடங்கி வைத்திருக்கிறார் முதலமைச்சர். கலைஞர் நூற்றாண்டையொட்டி குமரி முதல் கும்மிடிப்பூண்டி வரை ஒரு கோடி பனை விதைகள் நடும் முயற்சியையும் பனைமரத் தொழிலாளர் நலவாரியம் முன்னெடுத்திருக்கிறது.

நெளிவின்றி நீண்டு வளரும் பனை மரங்களைப் போல, பனை மரத் தொழிலாளர்களும் ஏற்றம் பெற கலைஞர் போட்ட விதை, இன்று ‘திராவிட மாடல்’ ஆட்சியில் விருட்சமாகிக் கொண்டிருக்கிறது. பனை வாழும் வரை பனைத் தொழிலாளர்களால் கலைஞரின் புகழும் நீண்டு வாழும்.

...வலம் வருவோம்

## திராவிட வாசிப்பு!

பெரியார்-அண்ணா-கலைஞர் ஆகியோர் முன்னெடுத்த சமூக-அரசியல்-பொருளாதாரச் சீர்திருத்தங்களால் பயன்பெற்ற ஓர் இளைஞர் திரள், திராவிட அரசியலைத் தொடர்ந்து சமூக ஊடக வெளியில் பேசியும் எழுதியும் வருகிறது. கொரோனா காலகட்டத்தில் இத்தகைய குரல்களைச் சங்கமிக்கத் தொடங்கப்பட்ட மின்னிதழ்தான் ‘திராவிட வாசிப்பு’. ஓர் இளம் பட்டாளம் முன்னெடுத்த கூட்டு முயற்சியின் விளைவாக மாதந்தோறும் இம்மின்னிதழ் வெளியாகிக் கொண்டிருந்தது. சிங்கப்பூரைச் சேர்ந்த மென்பொறியாளர் ராஜராஜன் இப்பணியை மேற்கொண்டு வருகிறார்.

பெரியார், அண்ணா, கலைஞர், பேராசிரியர், மணியம்மையார் ஆகியோருக்கு சிறப்பிதழும் வெளியானது. அரசியல் படைப்புகள் மட்டுமின்றி, சிறுகதை , திரைப்பட விமர்சனம், கவிதை உள்ளிட்டவையும் இவ்விதழில் இடம் பெற்று வருகின்றன. பெருவாரியான இளம் தலைமுறை எழுத்தாளர்களை அடையாளம் கண்டு, அவர்களது படைப்புகளை வெளியிட்ட ‘திராவிட வாசிப்பு’ மின்னிதழ் இப்போது தொகுக்கப்பட்டு ‘இளைய தலைமுறையின் புதிய திராவிடம்’ என்ற தலைப்பில் அச்சுப் புத்தகமாக 608 பக்கங்களில் வெளியாகி இருக்கிறது.

## :.ப்ளாஷ்பேக்



### தலைவர் பேச்சில் திகைப்பு!

1971-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பொன்னேரி தொகுதிக்கு சொற்பொழிவாற்ற வருகை தந்தார். 1967 தேர்தலில் வென்று பொன்னேரி சட்டமன்ற உறுப்பினராக இருந்த என் தந்தை திரு.நாகலிங்கம் அவர்கள் 5 வயது சிறுவனாக இருந்த என்னையும் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு, தலைவரை சந்திக்க அழைத்துச் சென்றார். சிறுவனாக இருந்தபோதும், தலைவர் கலைஞரின் பேச்சினைத் திகைப்பாய் கேட்டதாக என் தந்தை சொல்லி இருக்கிறார். 1971 தேர்தலிலும் கழகத்தின் சார்பில், என் தந்தை வெற்றி பெற்றார். அவசரநிலைப் பிரகடனத்தின்போது கைது செய்யப்பட்டு, இன்றுவரை ‘மிசா நாகலிங்கம்’ என்றே அறியப்படுகிறார்.



மோகன்ராஜ் நாகலிங்கம்

**-மோகன்ராஜ் நாகலிங்கம், பேரூர் தி.மு.க. முன்னாள் செயலாளர், மீஞ்சூர்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### நீதிக்கட்சி மாநாடு!

**1940-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24, 25 ஆகிய 2 நாட்கள் திருவாரூரில் நீதிக்கட்சியின் மாகாண மாநாடு, பெரியார் தலைமையில் நடைபெற்றது. 50 ஆயிரம் பேருக்கு மேல் கலந்துகொண்ட இந்த மாநாட்டில், 35 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில், ‘ஸ்ரீ’ என்ற வடமொழிச் சொல்லைப் பெயருக்கு முன்னால் பயன்படுத்தக்கூடாது, ‘திரு’ என்ற வார்த்தையையே அரசாங்கம் பயன்படுத்த வேண்டுமென்பதும் மிக முக்கிய தீர்மானம். அதன்பிறகே ‘ஸ்ரீ’, ‘ஸ்ரீமதி’ என்ற வார்த்தைகள் நீங்கி ‘திரு’, ‘திருமதி’ என்ற வார்த்தைகள் புழக்கத்திற்கு வந்தன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 342




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131